රාජ්‍ය පරිපාලන, පළාත් සභා සහ පළාත් පාලන අමාත්‍යාංශය
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
Ministry of Public Administration, Provincial Councils and Local Government

ස්වදේශ කටයුතු අංශය
உள்நாட்டலுவல்கள் பிரிவு
Home Affairs Division

"නිල මැදුර", ඇල්විටිගල මාවත, කොළඹ 05.
"நில மெதுர", எல்விடிகல மாவத்தை, கொழும்பு 05
"Nila Madura", Elvitigala Mawatha, Colombo 05.

TP : +94 112 050 450
Fax : +94 112 369 971
Email: info@moha.gov.lk
Web : www.moha.gov.lk

මගේ අංකය / எனது இல / My No HA/3/13/2-3

ඔබේ අංකය / உமது இல / Your No

දිනය / திகதி / Date 2026.07.

அனைத்து மாவட்ட செயலாளர்கள்/ அரசாங்க அதிபர்கள்
அனைத்து பிரதேச செயலாளர்கள்

**<u>கிராம உத்தியோகத்தர்களால் வதிவிடச் சான்றிதழ்கள் வழங்குவதற்கான (DS4) பொதுவான அறிவுறுத்தல்கள் குறித்து தெளிவுபடுத்துதல்</u>**

இந்த விடயம் தொடர்பான எனது சமஇலக்கம் மற்றும் 2025.09.25 ஆம் திகதியிடப்பட்ட கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் குறித்து கிராம உத்தியோகத்தர் தொழிற்சங்கங்கள் மற்றும் சேவை பெறுநர்களால் முன்வைக்கப்பட்ட விடயங்களைக் கருத்தில் கொண்டு, அந்த விடயங்கள் தொடர்பான மேலதிக விளக்கங்கள் பின்வருமாறு அமையும்:

I. இந்த வழிகாட்டுதல் வதிவிடச் சான்றிதழ்களை வழங்குவதற்கான பொதுவான அறிவுறுத்தலாகக் கருதப்பட வேண்டும். கிராம உத்தியோகத்தர்களிடம் தகவல்கள் உள்ள அல்லது இருக்க வேண்டிய சந்தர்ப்பங்களில், சேவை பெறுநர்களிடம் பல்வேறு ஆவணங்களைக் கோருவதைத் தவிர்க்க வேண்டும்.

II. "திருமணமானவர்/ திருமணமாகாதவர் " (Civil Status) எனக் குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில், திருமணமானவர், விதவை அல்லது சட்டப்படி பிரிந்தவர் என்பது தெளிவாக உறுதிப்படுத்தப்பட்டால், அதைக் குறிப்பிட வேண்டும். அத்துடன், திருமணமாகாதவர் என்று குறிப்பிடக் கோரப்பட்டால் மட்டும், விண்ணப்பதாரரிடம் இருந்து சத்தியக்கடதாசி மூலம் அதை உறுதிப்படுத்திய பின்னர், "சத்தியக்கடதாசி மூலம் உறுதிப்படுத்தப்பட்டது" என்று அந்த இடத்தில் குறித்துக்கொள்ள வேண்டும் அல்லது வேறு விடயங்களிள் என்பதின் கீழ் அவ்வாறு குறிப்பிடலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில், சத்தியக்கடதாசியைப் கோவையில் இணைத்து வைத்திருக்க வேண்டும்.

அதன்படி, வதிவிடச் சான்றிதழ் தேவைப்படும் காரணத்திற்கு திருமணமான /திருமணமாகாத நிலை குறிப்பிட வேண்டிய அவசியம் இல்லையென்றால், அந்தப் பகுதியில் "பொருந்தாது" என்று குறிப்பிடுவது போதுமானது என்பதோடு அத்தகைய சந்தர்ப்பங்களில், சிவில் நிலையை உறுதிப்படுத்த ஆவணங்களைக் கோர வேண்டிய அவசியம் இல்லை.

III. மேலும், துணை அட்டவணை 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் வதிவிடத்தை உறுதிப்படுத்த உதவும் ஆவணங்களாகும் என்பதோடு வதிவிடச் சான்றிதழ் பெறுவதற்கு அவை அத்தியாவசியமானதல்ல என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**எஸ். ஆலோக பண்டார**
செயலாளர்
பொது நிருவாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

பிரதிகள்

1. அனைத்து அமைச்சின் செயலாளர்கள் – தயவாய் தங்களுக்கு கீழ் இயங்கும் உரிய திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களை அறிவுறுத்துவதற்காக

2. தேர்தல் ஆணையாளர் நாயகம் – த.அ